**செய்தி வெளியீடு: 620** **நாள் : 27.9.2007**

## ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 10, 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் சாதனை படைத்த 12 மாணவ மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகள், பாராட்டுகள்

## ஐ.ஏ.எஸ் முதன்மைத் தேர்வுக்குச் செல்லும் 5 மாணவ மாணவிகளுக்கு தலா ரூ.25,000 ஊக்க உதவித் தொகை

### முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து அரசுத் தேர்வுகள் இயக்ககம் 2007 மார்ச்சுத் திங்களில் நடத்திய 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி திருவண்ணாமலை **அ. வைஷ்ணவி,** மாணவர் விருதுநகர் கு. **சுகதேவ்**, பழங்குடி இன வகுப்பைச் சேர்ந்த மாணவி நாமக்கல் **ந.ஜனனி,** மாணவர் விழுப்புரம் **இரா. விஜய்ராம்குமார்,** கிருத்துவ ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி வேலூர் **பிரியங்கா விக்டர்** மாணவர் நாகப்பட்டினம் **டி.எம்.ஏ. ஜெயபாலன்** ஆகியோருக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதமும்,

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி நாமக்கல் **ஆ. ஸ்ரீநித்யா** மாணவர் பா. **சுவீவர்மன்,** பழங்குடி இன வகுப்பைச் சேர்ந்த மாணவி சேலம் மு. சுகாசினி, மாணவர் நாமக்கல் ஜே.ச. சந்தோஷ், கிருத்துவ ஆதிதிராவிட வகுப்பைச் சேர்ந்த மாணவி திருச்சி **ஜோ.இக்னேசியஸ் நான்சி,** மாணவர் விழுப்புரம் **ஜே.ஜோபிரவின்குமார்,** ஆகியோருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் வீதமும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் பரிசுத் தொகைகளை வழங்கிப் பாராட்டினார்.

மேலும் ஐ.ஏ.எஸ் பதவிக்கான முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வு எழுதவிருக்கும் ஆதி திராவிட, பழங்குடியின வகுப்பைச் சார்ந்த 100 இளைஞர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் சேலம் எம். பூங்கொடி, சென்னை கே. சபரி ராஜ்குமார், தூத்துக்குடி ஏ. கனகராஜ், மதுரை ஜி. வீரபாண்டியன், மதுரை என். நந்தினிப் பிரியா ஆகியோருக்கு முதலமைச்சர் கலைஞர் தலா 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்கி வாழ்த்தினார்.

இந்நிகழ்வின்போது, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி தமிழரசி, செயலாளர் திரு. சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப., இயக்குநர் திரு. தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் முனைவர் சிவசூரியன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

***

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.